பெயர் தங்கதுரை த/பெ. ரங்கையன் வடக்குதெரு, வக்காரமாரி என்று கூறியதாகவும், மேற்படி பாட்டில்களை அவர் வைத்திருப்பதற்கு அவரிடம் எவ்வித உரிமமோ அரசு அனுமதியோ இல்லை என்று கூறியவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த மேற்படி 26 பிராந்தி பாட்டில்களை 15.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் வாயிலாக மேற்படி வேறு வெளி சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகளான தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றியதாகவும், மேற்படி தங்கள் முன்னிலையில் கைப்பற்றிய 26 பிராந்தி பாட்டில்களையும் அந்த இடத்திலேயே கொட்டி அழித்ததாகவும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** தன்னுடையது தான், பின்னர் எதிரியை 16.00 மணிக்கு கைது செய்து அவருடைய உறவினருக்கு தகவல் கூறி காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண்.152/2025, சட்டப்பிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் 30.06.2026ம் தேதி 16.00 மணிக்கு வழக்கினை உதவி ஆய்வாளர் பதிவு செய்வதற்க்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14) கைப்பற்றுதல் மகசர் சாட்சியான **அ.சா.2** தனது சாட்சியத்தில், கடந்த 30.06.2025ம் தேதியன்று மணல்மேடு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தபோது 15.00 மணிக்கு மணல்மேடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமுருகன் என்பவருடன் தானும் மற்றும் காவல் நிலைய காவலர் ஆனந்த் ஆகியோர் முடிகண்டநல்லூர் வக்காரமாரி அருகில் கண்காணித்து வந்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி தங்கதுரை என்பவர் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது ஒரு சிறிய சாக்குமூட்டையில் Seemans என்ற பெயருடன் கூடிய 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய டாஸ்மாக் 26 பிராந்தி பாட்டில்கள் இருந்ததாகவும், அவரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது தன்னுடைய பெயர் தங்கதுரை த/பெ. ரங்கையன் வடக்குதெரு, வக்காரமாரி என்று கூறியதாகவும், மேற்படி பாட்டில்களை அவர் வைத்திருப்பதற்கு அவரிடம் எவ்வித உரிமமோ அரசு அனுமதியோ இல்லை என்று கூறியவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த மேற்படி 26 பிராந்தி பாட்டில்களை 15.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் வாயிலாக மேற்படி வேறு வெளி சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகளான தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றியதாகவும், மேற்படி தங்கள் முன்னிலையில் கைப்பற்றிய 26 பிராந்தி பாட்டில்களையும் அந்த இடத்திலேயே கொட்டி அழித்ததாகவும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** தன்னுடையது தான், எதிரியை 16.00 மணிக்கு கைது செய்து அவருடைய உறவினருக்கு தகவல் கூறி காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண். 152/2025, சட்டப்பிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் 30.06.2026ம் தேதி 16.00 மணிக்கு வழக்கினை உதவி ஆய்வாளர் பதிவு செய்வதற்க்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.16 20:41:05 +0530

